# இன்றைய இறைவார்த்தை

# 10-07-2015

## ஆண்டின் பொதுக்காலம் 14ஆம் வாரம் – வெள்ளி
## முதல் ஆண்டு

**முதல் வாசகம்:**

உன் முகத்தைக் கண்ணாரக் கண்டுவிட்டேன்!

**தொடக்க நூலிலிருந்து வாசகம். 46 : 1 – 7, 28 – 30**

அந்நாள்களில் இஸ்ரயேல் தமக்கிருந்த யாவற்றையும் சேர்த்துக் கொண்டு புறப்பட்டு, பெயேர்செபாவைச் சென்றடைந்தார். அவ்விடத்தில் தம் தந்தை ஈசாக்கின் கடவுளுக்குப் பலிகளை ஒப்புக்கொடுத்தார். அன்றிரவு கடவுள் இஸ்ரயேலுக்குக் காட்சி அளித்து, "யாக்கோபு! யாக்கோபு!" என்று அழைத்தார். அவர், "இதோ அடியேன்" என்றார். கடவுள், "உன் தந்தையின் கடவுளான இறைவன் நானே. எகிப்திற்குச் செல்ல நீ அஞ்சவேண்டாம். அங்கே உன்னைப் பெரிய இனமாக வளரச் செய்வேன். நானும் உன்னோடு எகிப்திற்கு வருவேன். உன்னை நான் அங்கிருந்து மீண்டும் அழைத்து வருவேன். யோசேப்பு தன் கையாலே உன் கண்களை மூடுவான்" என்றார். யாக்கோபு பெயேர்செபாவை விட்டுப் புறப்பட்டார். இஸ்ரயேலின் புதல்வர்கள் தம் தந்தையாகிய யாக்கோபையும் தங்கள் பிள்ளைகளையும் மனைவியரையும் அவருக்குப் பார்வோன் அனுப்பியிருந்த வண்டிகளில் ஏற்றிக்கொண்டனர். கானான் நாட்டில் அவர்கள் சேர்த்திருந்த ஆடு மாடுகளையும் சொத்துகளையும் சேகரித்துக் கொண்டனர். இவ்வாறு யாக்கோபு தம் வழிமரபினர் அனைவரோடும் எகிப்திற்குப் போனார். தம் புதல்வரையும் அவர்கள் புதல்வரையும் தம் புதல்வியரையும் புதல்வரின் புதல்வியரையும் தம் வழிமரபினர் அனைவரையும் அவர் தம்மோடு எகிப்திற்கு அழைத்துக்கொண்டு சென்றார். கோசேன் பகுதியில் யோசேப்பு தம்மை வந்து சந்திக்குமாறு யாக்கோபு யூதாவைத் தமக்குமுன் அனுப்பியிருந்தார். அவர்கள் கோசேன் வந்து சேர்ந்தார்கள். யோசேப்பு தம் தேரைப் பூட்டிக்கொண்டு தம் தந்தை இஸ்ரயேலைச் சந்திக்கச் சென்றார். யோசேப்பு தம் தந்தையைக் கண்டவுடன் அவரை அரவணைத்து அவர் தோளில் சாய்ந்துகொண்டு வெகுநேரம் அழுதார். அப்பொழுது, இஸ்ரயேல் யோசேப்பிடம், "இப்பொழுது நான் சாகத் தயார். நீ உயிரோடுதான் இருக்கிறாய்! உன் முகத்தைக் கண்ணாரக் கண்டுவிட்டேன்!" என்றார்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 37 : 3 – 4, 18 – 19, 27 – 28, 39 – 40 (பல்லவி 39a)**
**பல்லவி: நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்து வருகின்றது.**

1. ஆண்டவரை நம்பு. நலமானதைச் செய். நாட்டிலேயே குடியிரு. நம்பத் தக்கவராய் வாழ். ஆண்டவரிலேயே மகிழ்ச்சி கொள். உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார். பல்லவி
2. சான்றோரின் வாழ்நாள்களை ஆண்டவர் அறிவார். அவர்கள் உரிமைச் சொத்து என்றும் நிலைத்திருக்கும். கேடு காலத்தில் அவர்கள் இகழ்ச்சி அடைவதில்லை. பஞ்ச காலத்திலும் அவர்கள் நிறைவடைவார்கள். பல்லவி
3. தீமையினின்று விலகு. நல்லது செய். எந்நாளும் நாட்டில் நிலைத்திருப்பாய். ஏனெனில், ஆண்டவர் நேர்மையை விரும்புகின்றார். தம் அன்பரை அவர் கைவிடுவதில்லை. அவர்களை என்றும் பாதுகாப்பார். பொல்லாரின் மரபினரோ வேரறுக்கப்படுவர். பல்லவி
4. நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்து வருகின்றது. நெருக்கடியான நேரத்தில் அவர்களுக்கு வலிமையும் அவரே. ஆண்டவர் துணைநின்று அவர்களை விடுவிக்கின்றார். பொல்லாரிடமிருந்து அவர்களை விடுவிக்கின்றார். அவரிடம் அடைக்கலம் புகுந்ததால், அவர்களை மீட்கின்றார். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (யோவான்: 16:3)**

அல்லேலூயா, அல்லேலூயா!
உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது,
அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழி நடத்துவார்.
அவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே.

✠ **தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 10: 16-23**

அக்காலத்தில் இயேசு தம் திருத்தூதர்களை நோக்கிக் கூறியது: “இதோ! ஓநாய்கள் இடையே ஆடுகளை அனுப்புவதைப் போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப் போல முன்மதி உடையவர்களாயும், புறாக்களைப் போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள். எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என் பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை

ஒப்புவிக்கும்பொழுது, "என்ன பேசுவது, எப்படிப் பேசுவது" என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார். சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும், தந்தையர் பிள்ளைகளையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள். என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர். அவர்கள் உங்களை ஒரு நகரில் துன்புறுத்தினால் வேறொரு நகருக்கு ஓடிப்போங்கள். மானிட மகனின் வருகைக்கு முன் நீங்கள் இஸ்ரயேலின் எல்லா நகர்களையும் சுற்றி முடித்திருக்க மாட்டீர்கள் என உறுதியாகவே உங்களுக்குச் சொல்கிறேன்."

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

அறிவுரை:

இயேசுவுக்காக பணியாற்றும் போதும், நற்செய்தி மதிப்பீட்டின் படி வாழும் போதும், விழிப்போடு செயல்பட வேண்டும். ஏனெனில் எதிரி யாரை விழுங்கலாம் என்று கர்ச்சித்து அலைகின்றான். ஆகவே துன்பங்கள், வேதனைகள், அவமானங்கள் ஏராளம், ஏராளம்.

அறிமுகம்:

அறிவுரை வழங்கும் போது, எதிரி எப்படிப்பட்டவன் என்பதையும் அறிமுகம் செய்கிறார். இயேசுவுக்காக நாம் பணியாற்றும் இச்சமூகம் எப்படிப்பட்டது என்பதையும் உணரமுடிகிறது. கடின மனம் கொண்டது, வணங்கா கழுத்துள்ளது, கொடூர மனம் கொண்டது. கேவலப்படுத்தும், அவமானப்படுத்தும், காவல் நிலையம், மக்கள் மன்றம், நீதி மன்றம், கொலைக்களம் வரை இழுத்தச் செல்லும் வன்மனம் கொண்டது.

உண்மை:

நற்செய்தியை முழக்கமிட்டு அறிவிக்கும் போது, பேசுவது நாம் அல்ல தந்தையின் ஆவியாரே. பேசும் பொருளும் நம்முடையது அல்ல. பேசும் முறையும் நமது அல்ல. என்ன பேசுவது எப்படி பேசுவது என கவலை வேண்டாம். என்ன பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் அருளப்படும். நற்செய்திப்பணியாளர்கள் இறைவனின் பணியாளார்கள். இறைபணிகளுக்கும் பணியாளர்களுக்கும் துன்பங்கள் தடைகள் தடங்கள்கள் கொடுக்கும் போதெல்லாம் இறைவனோடு போராடுகிறோம். இறைவனோடு போராடி வென்ற மனிதன் இல்லை, அழிந்தவர்கள் ஏராளம்.

**********